செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் முன்னிலை திரு. வீ.அறிவுடை நம்பி.,

ந.க.3597-2016-அ3

நாள்.11.09.2023

பொருள் பொதுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் – செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலகு – வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திருமதி.த.சத்தியவாணி என்பவரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் வரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை அரசாணை (3டி) எண்.138 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு., பணி -9(1) பிரிவு நாள்.14.08.2023.

.........

**ஆணை**

செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலகு, திருவஞ்சேரி கிராம உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே 07.11.2015 அன்று காலஞ்சென்ற திரு.த.தசரதன் என்பவரின் மகள் திருமதி.த.சத்தியவாணி என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கப்பட்டது. தனியர் பணியில் சேர்ந்த நாளான 16.05.2018 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் பார்வையில் காணும் அரசாணையின்படி பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி அரசாணையின்படி தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு வண்டலூர் வட்டாட்சியருக்கு இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஓம்-வீ.அறிவுடை நம்பி
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது)
செங்கல்பட்டு.

--உத்தரவின்படி--

11/9/2023

அலுவலக மேலாளர்(பொது)

பெறுநர்
திருமதி.த.சத்தியவாணி,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வண்டலூர் வட்டம்.

11/9/23

நகல்
1.வருவாய் கோட்டாட்சியர்,
தாம்பரம் ........தகவலுக்காக.
2.வட்டாட்சியர்,
வண்டலூர் ....தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும்.

Scanned with CamScanner

**<u>சுருக்கம்</u>**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலகு – திருமதி.த.சத்தியவாணி, த/பெ. காலஞ்சென்ற திரு.எம்.தசரதன் – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,</u>**

**<u>பணிகள் அலகு, பணி–9(1) பிரிவு</u>**

**அரசாணை (3டி) எண். 138** | **நாள் 14.08.2023.**

**சோபகிருது வருடம், ஆடி–29,**
**திருவள்ளுவர் ஆண்டு 2054.**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆ.கு.3/ 40201/2019, நாள்.15.10.2022.

******

**<u>ஆணை:–</u>**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 07.11.2015 அன்று காலஞ்சென்ற திரு.எம்.தசரதன் என்பவரது மனைவி திருமதி. கற்பகம் என்பவர் தனது மகள் திருமதி.த.சத்தியவாணி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 13.01.2016 அன்று மனு அளித்துள்ளார் என்றும், தனியர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 03.01.2018 அன்று மனு அளித்துள்ளார் என்றும், இம்மனுக்கள் மூன்றாண்டு காலக்கெடுவிற்குள் பெறப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது என்றும், அரசு ஊழியர் இறந்த (07.11.2015) தேதியில் தனியர் திருமதி.த.சத்தியவாணி என்பவர் 23 வயது நிரம்பப் பெற்றுள்ளார் என்றும், மனு அளிக்கப்பட்ட 13.01.2016 தேதியில் 23 வயதினை பூர்த்தி செய்துள்ளதோடு, உரிய கல்வித்தகுதியான 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் (மார்ச்–2008) என்றும், தனியர், திருமதி.த.சத்தியவாணி என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறியநிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே இளநிலை வருவாய் ஆய்வாளர் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என்ற செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினை ஏற்று, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தேதியில் தனியர் திருமணமான மகள் என்பதால் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ–1) துறை, நாள்.23.01.2020ன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி

//த.பி.பா//

Scanned with CamScanner

நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் பெற பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்வு செய்து, தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 16.05.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினைப் பெற்றுத் தருமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசளவில் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 07.11.2015 அன்று காலஞ்சென்ற திரு.எம்.தசரதன் என்பவரின் மகள் திருமதி.த.சத்தியவாணி என்பவர் திருமணமான பெண் வாரிசுதாரர் என்பதால், தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58-இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016இன் பிரிவு 15 மற்றும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் பெற பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்வு செய்து தனியர் திருமதி.த.சத்தியவாணி என்பவர் பணியேற்ற நாளான 16.05.2018 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.3727/க்யூ.2/2023-1, நாள்.07.06.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4932265/ஜி.2/2023, நாள்.24.07.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-05.
மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு மாவட்டம்.
திருமதி.த.சத்தியவாணி, இளநிலை வருவாய் ஆய்வாளர்.
(செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் மூலமாக)

நகல்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

14/8/2023
பிரிவு அலுவலர்.

Scanned with CamScanner